# யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் புதிய பரிணாமமும் அது எதிர் கொள்ளும் சவால்களும்: ஓர் விமர்சனப் பகுப்பாய்வு

**Mr. MI. Mohamed Irfan**

*Department of Social Sciences, South Eastern University of Sri Lanka.Oluvil.*

**கலைச் சொற்கள்:** *வெளிநாட்டுக் கொள்கை, யுத்தத்திற்குப் பின்னர்*

## அறிமுகம்

உலக நாடுகளினுடைய சீரான இயக்கத்திற்கும் தேசிய நலனை அடைவதற்குமான சூழ்நிலையை ஏற்படுத்துவது வெளிநாட்டுக் கொள்கையாகும். ஒரு நாடானது அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சாரம் போன்ற பல்வேறு தேவைகளின் அடிப்படையில் இன்னொரு நாட்டுடன் உறவுகளை மேற்கொண்டு வருகின்றது (சிவராஜா,1994). தேசிய நலனை சர்வதேச சமூகத்தில் நிறைவேற்றிக் கொள்ளல், உலக நாடுகளுடன் நட்புறவு, வளப்பங்கீட்டில் உதவி, பாதுகாப்பு, கலாச்சாரத் தொடர்பு, சர்வதேச உறவு, சர்வதேச அளவில் நாட்டினை புகழ்பெறச் செய்தல், தேசிய அடையாளம், சர்வதேச அமைப்புக்களின் ஆதரவினைப் பெறல், ஆள்புல ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல் போன்ற பல்வேறு விதமான நன்மைகளையும் உதவிகளையும் பெறுவதற்கு சிறப்பான வெளியுறவுக் கொள்ளை அவசியமாகும் (Kodikara,1992).

இலங்கையைப் பொறுத்தமட்டில் சுதந்திரத்திற்கு முன்னரான காலணித்துவ காலம் தொடக்கம் இன்று வரை அரசியல் மாற்றங்கள் உட்பட ஏனைய அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பிரதான இருப்பிடமாக வெளியுறவுக் கொள்கை அமைந்து வந்துள்ளது. கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கையில் இணமுரண்பாடு புரையோடிப்போயிருந்தது. இதனைத் தீர்ப்பதற்கு பல்வேறு விதமான சமாதான முயற்சிகளும் தீர்வுத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான நீண்டகால சமாதான முயற்சியினையடுத்து கடந்த 2009 மே மாதம் 18ஆம் திகதி இலங்கையில் புரையோடிப் போயிருந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது (மனோகரன்,2008). இந்த யுத்த வெற்றிக்கும் யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் முன்னேற்றத்திற்கும் படிப்படியான வளர்ச்சிற்கும் வெளியுறவுக் கொள்கையின் புதிய பரிணாமமே பிரதான காரணியாகும். இருப்பினும் இன்றைய சூழ்நிலையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தியை துரிதமாக மேற்கொள்வதிலும் இலங்கை பாரிய சவால்களை எதிர்நோக்குவதோடு யுத்தத்திலிருந்து விடுபட்ட மக்கள் இன்னும் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இவ்வாறான இன்னல்களை வெற்றிகொள்வதற்கும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மறுசீரமைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. இந்தப்பின்னணியில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் காணப்படும் அண்மைய செல்நெறிகளையும் புதிய போக்குகளையும் ஆராய்வதற்கு இக்கட்டுரை விளைகின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை ஏற்றிருக்கும் புதிய பாத்திரத்தினையும் அதன் மீதுள்ள சவால்களையும் அடையாளப்படுத்துவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி, சமாதானம் மற்றும் வெளிநாட்டுக் கொள்கை என்பவற்றுக்கு இடையிலான தொடர்பு இலங்கைச் சூழ்நிலையில் எவ்விதம் உணரப்பட்டுள்ளது என்ற விடயத்தினைப் பரிசிட்பதனை இவ்வாய்வு துணை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வு விபரணரீதியான பகுப்பாய்வு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டதாகும். இங்கு பண்புசார் மற்றும் அளவுசார் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தரவுகள் முதன்நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. முதன்நிலைத் தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல் ஆகிய ஆய்வு நுட்பங்களைக் கொண்டும் இரண்டாம் நிலைத்தரவுகள் பொருத்தமான நூல்கள், ஆவணங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றிலிருந்தும் சேகரிக்கப்பட்டுள்ளது.

**சுருக்கமும் முடிவுரையும்**

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் புதிய போக்கு ஆசிய, ஆபிரிக்க நாடுகளுடனான நற்புறவும் மேற்கு நாடுகளுடனான அந்நியமாதலுமாகும். இப்போக்கு இலங்கை சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் சவால்களை ஏற்படுத்துவதுடன், முதலாளித்துவ – கம்யூனிச முகாம் உறவினை மீண்டும் நினைவூட்டும் பாங்கில் அமைந்துள்ளது. மேலும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் வெளிப்படும் புதிய செல்நெறிகள் யுத்தத்திற்குப் பின்னரான சமாதானம், அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டுக் கொள்கை என்பவற்றுக்கிடையிலான உறவினை மீழ்வரைவிலக்கணம் செய்கிறது.

இந்த வகையில் காலணித்துவ காலம் தொடக்கம் இலங்கையின் வளர்ச்சிக்காக வெளியுறவுக் கொள்கை பாரிய பங்களிப்பினை செலுத்தி வருகின்றது. இருந்தாலும் யுத்தத்திற்குப் பின்னரான வெளியுறவுக் கொள்கையானது இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு போதும் இல்லாதவாறு ஒரு புதிய போக்கினைக் கடைப்பிடித்து வருகின்றது. குறிப்பாக அண்மைக்காலமாக மேற்கத்தேயம் தவிர்ந்த ஏனைய மத்திய கிழக்கு, ஆசிய, கொமினியுஷ மற்றும் ஆபிரிக்க நாடுகளுடன் நெருக்கமான உறவை வைத்துக் கொள்ளும் அதேவேளை மேற்கத்தேயத்துடனும் மேற்கத்தேயம் சார்ந்த நாடுகளுடனும் முறுகல் நிலையுடன் கூடிய கசப்புறவினையே வைத்துள்ளது. இது இலங்கையின் சுதந்திரமான இயக்கத்திற்கும் செயற்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் பாரிய சவாலாக உருவெடுத்துள்ளது.

**References**


Shelton U. Kodikara, (1992: 2nd Edition), *'Foreign Policy Decision Making in Sri Lanka, Foriegn Policy of Sri Lanka: A third World Perspective'*, Chanakya Publication, Delhi.

Shelton U. Kodikara, (1999), *'Foreign Policy of Sri Lanka: The World Perspective'*, New Delhi, Chankya Publication.

மனோகரன், ஆ.க, (2008 செப்டம்பர்),*'இலங்கை தேசிய இன முரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகளும் (ஒரு வரலாற்றுப் பார்வை 1948-2007)'*, சென்னை - இராயப் பேட்டை: தி பாக்கர்.

அம்பலவாணன் சிவராஜா, (1994: 4th Edition),*'இலங்யையின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்ச்சியும் மாற்றங்களும்'*, உயர் கல்வி நிறுவனம், கண்டி, இலங்கை.